# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 460/2018

ஆணை எண்: 94 /2018

நாள்: 9/04/2018

திரு. அ. சக்கரவர்த்தி,
13, புதுப்பேட்டை தோட்டத் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை 600 014. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
மயிலம் ஊராட்சி ஒன்றியம்,
விழுப்புரம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

## ஆணை

சென்னை மாவட்டம், இராயப்பேட்டை, 13, புதுப்பேட்டை தோட்டத் தெருவில் வசிக்கும் திரு. அ. சக்கரவர்த்தி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்த 5.4.2018 நாளிட்ட மனுவில் அவருடைய கிராமம் விழுப்புரம் மாவட்டம், மயிலம் ஒன்றியத்தைச் சார்ந்த கள்ளகுளத்தூர் என்றும், அங்கு அவரின் வீடும், தோட்டமும் உள்ளதென்றும், தோட்டத்திற்கு ஒரு தெரு வழியாகத்தான் செல்ல வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இந்த தெருவின் வழியாகத்தான், அவர் நிலத்திலும் மற்றவர் நிலத்திலும், மாவட்ட சாலையிலும் பெய்யும் மழைநீர் பெருக்கெடுத்து செல்லும் தற்போது அத்தெருவில் மண்கொட்டி நிரப்பி மேடாக்கப்பட்டுள்ளதால் அத்தெருவின் வழியாக வண்டிகள் செல்லமுடியாது. மழைநீர் செல்லாமல்

தடை செய்யப்பட்டுள்ளது என்றும், மழை பெய்தால் அவ்விடம் பெரியகுளம்போல் ஆகிவிடுகிறது என்றும், அப்போது சிறுவர்கள் அதில் விழுந்து உயிர் இழக்கக்கூட வாய்ப்பு உள்ளதெனத் தெரிவித்து, தெருவினை சமன் செய்து, மழைநீர் தங்குதடையின்றி செல்ல நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு 7–ன்படி 'உள்ளாட்சி அமைப்பு' என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே, இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் மாவட்டம், அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பி வைக்கப்படுகிறது. மேலும், இப்பொருள் குறித்து விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 11.4.18

சென்னை–600 032

10.4.18

11/4/18

பெறுநர்

திரு. அ. சக்கரவர்த்தி,
13, புதுப்பேட்டை தோட்டத் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை 600 014.

நகல்

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
விழுப்புரம் மாவட்டம்,
விழுப்புரம் (இணைப்பு – 5 தாட்கள்)

2. இருப்பு கோப்பு